ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2322/21 - 2023 මාර්තු මස 07 වැනි අඟහරුවාදා - 2023.03.07
*2322/21 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து அன்னியச் செலாவணியாக அல்லாது நன்கொடை அல்லது அன்பளிப்பு என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில், 2022, நவெம்பர் 30 ஆந் திகதிய 2308/17 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் 0804.10.10 மற்றும் 0804.10.20 இயைபு முறைக் குறியிட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பேரீத்தம் பழங்களை இறக்குமதி செய்யும் போது கிலோவிற்கு 200 ரூபாய் என விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து கிலோவிற்கு 1 ரூபாவினை அறவிட்டதன் பின்னரான மீதித் தொகையினை தள்ளுபடிசெய்வதற்கு இந்த கட்டளையினை ஆக்குகிறேன்.*

*இக் கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2023 மாச்சு 08 முதல் மறு அறிவிப்பு வரை செல்லுபடியாகும்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு,
கொழும்பு 01,
2023, மாச்சு மாதம் 07.

EOG 03 - 0112